மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.

முன்னிலை: திரு.D.ராம்கணேஷ் M.A., M.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.
2021ம் வருடம் ஏப்ரல் மாதம் 09ம் நாள்
சார்வரி ஆண்டு பங்குனி மாதம் 27ம் நாள் வெள்ளிகிழமை

**I.A. No. 221/2020**
**in**
**O.S. No. 13/2018**

C. கண்ணுச்சாமி

..... மனுதாரர்/வாதி

//எதிர்//

1. சிங்கராயர்
2. சந்தியாகு

.... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

3. லாரன்ஸ்
4. சந்தனமேரி

.... எதிர்மனுதாரர்கள்/சேர்க்கப்படவேண்டிய நபர்கள்

இம்மனு 10.02.2020ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K. சந்தனக்கருப்புச்சாமி அவர்கள் ஆஜராகியும், 1,2 எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.C. குருசாமி அவர்கள் ஆஜராகியும், 3,4ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரின்மை காரணமாக ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், கடந்த 29.03.2021ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

**உத்தரவு**

இந்த நிர் மனுவும் மனுதாரர்/வாதி தரப்பில் அசல் வழக்கில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 3,4ம் எதிர்மனுதாரர்களை அசல்வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க அனுமதி கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10 மற்றும் சட்டப்பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், அசல் வழக்கானது 1,2 எதிர்மனுதாரர்களை கட்டுப்படுத்தி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல்செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தினை வாதி கடந்த 16.06.2016ம் தேதியில் 3,4ம் எதிர்மனுதாரர்களிடமிருந்து கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகின்றார் என்றும் 1, 2 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் மேற்படி கிரையத்தை ஆட்சேபணை செய்துள்ளார்கள் என்றும், 3,4ம் எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தினை வாதிக்கு கிரையம் செய்து கொடுத்த பின்னர், 1,2 எதிர்மனுதாரர்களுடன் கூட்டு சேர்ந்து தாவா சொத்தில் வாதியின் அனுபவத்திற்கு இடையூறு செய்து வருகின்றார்கள் என்றும், அவ்வாறு செய்வதற்கு 3,4ம் எதிர்மனுதாரர்களுக்கு உரிமையில்லை என்றும், எனவே தாவா சொத்தினை 3,4 எதிர்மனுதாரர்கள், மனுதாரருக் கிரையம் செய்து கொடுத்த பின்பும் தொடர்ந்து இடையூறு செய்து வருவதால், மேற்படி 3,4ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்கவேண்டியது அவசியமானது என்றும், இம்மனுவை அனுமதிப்பில் எதிர்மனுதாரர்களுக்கு ஆட்சேபணை இருக்காது என்றும், மனு அனுமதிக்கப்படாவிட்டால், வாதிக்கு பெருத்த இழப்பு ஏற்படும் என்றும், எனவே மனு அனுமதிக்கப்படவேண்டுமென்றும் வாதுரைக்கப்பட்டது.

**2) 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிர்உரையின் சுருக்கம்**

3 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பினருக்கு போதுமான வாய்ப்பு கொடுத்தும் எதிர் உரை தாக்கல் செய்யப்படாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள்.

மனுவில் கண்டுள்ள விபரங்கள் உண்மைக்கு புறம்பானது என்றும் 4ம் எதிர்மனுதாரர் வழக்கு தரப்பினராக சேர்ப்பதற்கு எவ்வித முகாந்திரமுமின்றி எதிர்மனுதாரர்களுக்கு வீண் அலைச்சல் மற்றும் காலதாமதத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற உட்கருத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ஏற்கனவே மனுதாரர்/வாதி தரப்பில் அசல் வழக்கினை திருத்தம் செய்யக்கோரி இடைக்கால மனு 672/2019ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அதுவும் Not press செய்ததன் அடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், அதன் மறுரூபத்தில் இந்த மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 16.06.2016ம் தேதியிட்ட கிரைய பத்திரமே செல்லாது என்பதால், மனுதாரர் இந்த நிர் மனு பரிகாரம் கோருவதற்கு அருகதையற்றவர் என்றும், அசல் வழக்கு தாக்கல் செய்யும்போதே 3,4ம் எதிர்மனுதாரர்களை வழக்கு தரப்பினராக சேர்க்காமல் வாதி விட்டுள்ளார் என்றும், மேற்படி வழக்கில் 3ம் எதிர்மனுதாரரால், கடந்த 28.11.2000ம் தேதியிட்டு விடுதலைப்பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டுள்ள நிலையில், 3,4ம் எதிர்மனுதாரர்களை தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்றும், தாவா சொத்து தொடர்பாக 1,2 மற்றும் 4ம் எதிர்மனுதாரர்களுக்கிடையே மதுரை முதலாவது சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 1013/2011 பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது

என்றும், எனவே மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று எதிர்வாதம் செய்யப்பட்டது.

3) மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதை தீர்வு காண வேண்டியது பொருண்மை ஆகும்.

**தீர்வு:-**

4) இருதரப்பு வாதுரை மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்யும்போது, இந்த நிர் அசல் வழக்கும் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது தாவா சொத்தினை பொறுத்து பிரதிவாதிகளைக்கட்டுப்படுத்தி நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தானது ஆதியில் சந்தனமேரியின் கணவர் சவரிநாதன் என்பவருக்கு பாத்தியமாக இருந்ததை மேற்படி சவரிநாதன் வாரிசுகளான 3,4 எதிர்மனுதாரர்களிடமிருந்து 16.06.2016ம் தேதி வாதி கிரையம் பெற்று அனுபவம் செய்து வருவதாகவும், அதில் பிரதிவாதிகள் இடையூறு செய்ததால், 11.09.2017ம் தேதியில் காடுபட்டி காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்து தொடர்ச்சியாக இந்த நிர் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக வாதுரைக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பிரதிவாதிகளும் வாதிக்கு கிரையம் செய்து கொடுத்த சந்தனமேரி மற்றும் லாரன்ஸ் என்பவர்களும் கூட்டு சேர்ந்து தாவா சொத்தில் வாதியின் அனுபவத்தில் இடையூறு செய்து வருவதால் மேற்படி சந்தனமேரி, லாரன்ஸ் என்பவரை தாவா வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் வாதி தரப்பில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட திருத்தல் மனுவும் இடைக்கால மனு 672/2019ன்படி மனு தாக்கல் செய்து அதுவும் Not press செய்யப்பட்டதன் அடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், 3ம் எதிர்மனுதாரரால், ஏற்கனவே 28.11.2000ம் தேதியில் தாவா சொத்தினை பொறுத்து விடுதலைப்பத்திரம் எழுதிகொடுக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி 3 மற்றும் 4ம் எதிர்மனுதாரர்கள் இந்த நிர் அசல் வழக்கில் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார்கள் என்றும், தாவா சொத்து தொடர்பாக அசல் வழக்கு எண். OS.No. 1013/2011 பாகப்பிரிவினை வழக்கு நடைபெற்று வருவதாகவும் எதிர்வாதம் செய்யப்பட்டது. ஆனால் மேற்படி பாகப்பிரிவினை வழக்கு நிலுவையில் இருப்பதாக எவ்வித ஆவணங்களும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. அதேபோல வாதி தரப்பில் இந்த நிர் அசல் வழக்கில் விளம்புகை பரிகாரம் கோரி இடைக்கால மனு எண். 673/2019ன் வாதியால் திருத்தல் மனு தாக்கல் செய்யப்பட்டு அதுவும் வாபஸ் பெறப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்த நிர் மனு பரிகாரத்தினை பொறுத்தமட்டில் 3 மற்றும் 4ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் தேவையான மற்றும் அவசியமான தரப்பினரா என்பது மட்டுமே தீர்வு காண வேண்டியது அவசியமானதாகும். வாதிக்கு கிரையம் செய்து கொடுத்த கிரையதாரரான 3 மற்றும் 4ம் எதிர்மனுதாரரை வாதி தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய சட்ட வழிமுறைகள் இருந்த போதிலும், மேற்படி சந்தனமேரி, லாரன்ஸ் என்பவர்கள் பிரதிவாதிகளுடன் கூட்டு சேர்ந்து தாவா

சொத்தில் வாதியின் அனுபவத்தில் இடையூறு செய்து வருவதாக வாதம் செய்து அதற்கு ஆதரவாக 11.09.2017 ம் தேதியில் கொடுக்கப்பட்ட புகார் மனு அலுவலக நகல் மற்றும் புகார் மனு ரசீது ஆகியவை அசல் வழக்கு பிராதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி சந்தனமேரி மற்றும் லாரன்ஸ் என்பவரை வாதி தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்வதற்கு எவ்வித வாய்ப்பும் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

5) மேலும் மேற்படி சந்தனமேரி மற்றும் லாரன்ஸ் என்பவர் வாதிக்கு கிரையம் செய்து கொடுத்த கிரைய பத்திரமும் பிராதுடன் சான்றாவணங்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அவ்வாறு சந்தனமேரி மற்றும் லாரன்ஸ் என்பவர்கள் தாவா சொத்தினை கிரையம் செய்து கொடுக்க உரிமையில்லை என்றும், அது தொடர்பாக பாகப்பிரிவினை வழக்கு நிலுவையில் இருந்து வருவதாகவும் எதிர்வாதம் செய்யப்பட்டது. எனவே மேற்படி சந்தனமேரி மற்றும் லாரன்ஸ் என்பவர்களை வழக்கு தரப்பினர்களாக சேர்த்தால் மட்டுமே வழக்கு தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சனையை முழுமையாகவும், அறுதியாகவும் தீர்வு காண இயலும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேலும் உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10ன் படி வழக்கினை அறுதியாக தீர்வு காண தேவையான தரப்பினரை சேர்க்க வழிமுறை மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதுவும் மாண்புமிகு உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி உறுதி செய்து வழிக்காட்டுதல் வழங்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

**<u>Bageyalakshimi (vs) kankaraj case reported in 2017 (1) MWN 647 (Mad)</u>**

The following test must be satisfied to implead the third party in a suit (a) that there must be a right to same relief against such party in respect of the controversies involved in the suit proceedings (b) that his presence should be necessary to enable the court to effectively and completely adjudicate upon and all the question involved in the suit. எனவே தாவா சொத்து தொடர்பாக வழக்கு தரப்பினர்கள் மற்றும் சந்தனமேரி, மற்றும் லாரன்ஸ் ஆகியோர்களுக்கிடையே மேலும் பிரச்சனை எற்படுவதை தவிர்க்கும் பொருட்டும் மேற்படி சந்தனமேரி மற்றும் லாரன்ஸ் என்பவர்களை அவசியமான மற்றும் தேவையான தரப்பினர்களாக சேர்க்க வேண்டியது அவசியம் என்றே இந்நீதிமன்றம் தீர்வு கண்டு அதனடிப்படையில் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

இறுதியாக இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்/வாதியால் வழக்கு நடவடிக்கையில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு ஏற்பட்டுள்ள காலஇழப்பை ஈடுசெய்யும் பொருட்டு மனுதாரர்/வாதி, 1,2 எதிர்மனுதாரர்களுக்கு ரூ.500/- செலவு தொகையாக 16.04.2021க்குள் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இம்மனு அனுமதிக்கப்படுகின்றது.

அடுத்த கேட்பு நாள் :17.04.2021

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2021ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம். D.ராம்கணேஷ்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

//உண்மை நகல்//